DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW24 |
| Name | : | **ஜெயலட்சுமி** |
| Father's / Husband's Name | : | சங்கர் |
| Age | : | 43 |
| Religion | : | Hindu |
| Calling | : | Inspector of Police |
| Caste | : | Vanniyar |
| Village | : | Vaniyambadi |
| Date | : | 16.11.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 24.10.2015 ம் தேதி 20.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது வாலாஜாபேடடை காந்தி நகரைச் சேர்ந்த முனுசாமி மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகார் மனுவை பெற்று வாலாஜாபேட்டை காவல் நிலைய கு எண். 424/2015 பிரிவுகள் 366, 302 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். மேலும் இவ்வழக்கை மேல்விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்துக்கொண்டேன். முதல் தகவல் அறிக்கையினை வாலாஜா நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 18.12.2015 ம் தேதி இவ்வழக்கில் கடத்தப்பட்ட பெண் லாவண்யா வயது 19, என்பவரை வாலாஜா பேட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளர் உத்தரவுப்படி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கிற்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் காவல் நிலையத்திற்கும் வாலாஜா பேட்டை நீதிமனற்த்திற்கும் சுமார் 200 மீட்டர் தொலைவு இருக்கும். எங்கள் காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு சாதாரணமாக நடந்து சென்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். சம்பவம் நடந்த நேரத்தில் இருந்து புகார் 2.30 மணி நேரம் காலதாமத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமத்திற்குரிய காரணம் குறிப்பிடவில்லை என்றால் காலதாமதம் அதிகம் இல்லாதால் அதற்குரிய காரணம் குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் 1 கி மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கை காலை 10 மணிக்கு நீதிமன்றத்திற்கு வந்தடைந்தது என்றால் சரிதான். நான் வாதி ஆறுமுகத்திடம் எழுதப்படாத வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு பின்னர் வழக்கிற்கேற்றாற்போல் ஜோடனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH